துணை அமைப்பாளர்கள் - எம்.கோவிந்தராஜ் 1/2 வது தெரு, மெக்காபுரம், திருவல்லிக்கேணி, சென்னை 5 சிட்டி டி.மதன் எண்.98, கீரீன்வேஸ் ரோடு, ஆர்.ஏ.புரம், சென்னை 28 ஜி.கே. நரசிம்மன் எண்.166/191, அன்னை சத்தியா நகர், 4வது தெரு, கீரீன்வேஸ் சாலை, சென்னை 28 ஞானபிரபு எண்.3/73, சௌத் கேசவபெருமாள்புரம், பாரதி நகர், 3வது குறுக்கு தெரு, ஆர்.ஏ.புரம், சென்னை - 28 எம்.சதீஷ் எண்.122, ஏகாம்பரம் தெரு, மயிலாப்பூர், சென்னை - 4 வே.மணிகண்டன் எண்.14, ஏகாம்பரம் பிள்ளை தெரு, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-4 ஆறுமுகம் எண்.1167 14வது தெரு, அசோக் நகர், சென்னை -83

**அரியலூர் மாவட்டம்**

தலைவர் - பி.ஆர்.பாண்டியன் பொன்பரப்பி அஞ்சல் செந்துரை ஒன்றியம், அரியலூர் மாவட்டம்

துணை தலைவர் - ம.ஆனந்தன் சாஸ்திரி நகர், கல்லங்குறிச்சி சாலை, அரியலூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்

அமைப்பாளர் - **முருகானந்தம்** புதுப்பாளையம் அஞ்சல் தா.பழூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஆப்ரகாம் பெரியகிருஷ்ணாபுரம், ஆண்டிமடம் ஒன்றியம், அரியலூர் மாவட்டம் சிவக்குமார் தேவமங்கலம் அஞ்சல் ஜெயங்கொண்டம் ஒன்றியம், அரியலூர் மாவட்டம் சேகர் கோட்டியால் அஞ்சல் தா.பழூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம். செல்வராஜ் கல்லங்குறிச்சி, அரியலூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம் உலகநாதன் ஒட்டக்கோவில், அரியலூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

தலைவர் - ஜே.முருகன் எண்.1/355, சந்தியவாணிமுத்த தெரு, தீர்த்தக்கிரையம்பட்டு, செங்குன்றம், சென்னை 52

துணை தலைவர் - சி.சரவணன் எண். 14/8, ஈசனிமூர்த்தி கோயில் தெரு, 1வது தெரு, திருவொற்றியூர் சென்னை19

அமைப்பாளர் - **ரா.மோகனசுந்தரம்** எண். 18/13, பொன்னியம்மன் நகர், 5வது தெரு, திருவொற்றியூர் சென்னை 19

துணை அமைப்பாளர்கள் - பா.அருண்ராஜ் எண். 3/99, பெருமாள் கோயில் தெரு, செட்டிமேடு, சென்னை 60 த.சீனிவாசன் எண்.1, தாமரை குளம் 2வது தெரு, பெரியதோப்பு, மணலி, சென்னை 68 ப.சு.க.இளங்கோவன் எண். 5/111, சுப்பிரமணி பாரதி தெரு, எம்.எ. நகர், பாடியநல்லூர், சென்னை 52 சு.பார்த்தசாரதி எண். 3/73, பெருமாள் கோயில் தெரு, செட்டிமேடு, சென்னை60 பா.ரமேஷ் எண். 4718, 1வது பிரதான சாலை, மாத்தூர் எம்.எம்.டி.எ சென்னை68 ஜி.முத்துகுமார் எண். 38/4, சோமசுந்தரம் நகர், 2வது தெரு, திருவொற்றியூர், சென்னை-19

**நாகை மாவட்டம்**

தலைவர் - எஸ்.சிவராமன் 2, புகழேந்தி தெரு, உத்தமசோழபுரம், நரிமனம் (அஞ்சல்) நாகை தாலுக்கா

துணை தலைவர் - வி.சாய்பாபஷா 19, மெயின் ரோடு, குருக்கத்தி கூத்தூர் அஞ்சல், கீழ்வேலூர் தாலுக்கா

அமைப்பாளர் - **எஸ்.வி.டி.அருள்** 5/59, ஆண்டியப்பன் காடு மருதூர் தெற்கு (அஞ்சல்) வேதாரண்யம் தாலுகா

துணை அமைப்பாளர்கள் - இ.ஜோதிபாசு அகரவெளி தெரு, திருக்குவளை அஞ்சல், நாகப்பட்டினம் தமிழ்வாணன் காமராஜர் காலனி, அம்பல் அஞ்சல், நாகப்பட்டிணம் பொன். அழகிரிசாமி ஆணைக்குளத்தெரு, வாழ்குடி விற்குடி (அஞ்சல்) நாகை தாலுக்கா டி.எஸ்.பாலு ஆயக்காரன்புலம் 2 செட்டியார் குத்தகை, வேதாரண்யம் ராஜ்குமார் மெயின்ரோடு, பனங்குடி நாகூர் (அஞ்சல்) ஆர்.ரஞ்சித் குமார் 8, சிவன் சன்னதி தெரு, நாகூர் கு.விஜயன் 77, அம்பேத்கார் நகர் வடக்கு பிரோடு தெரு, நாகூர் முகம்மது ரசீது மரைக்காயர் 429, மெயின்ரோடு நாகூர்

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - கோ.கோபிநாத் 9, மகிழ வீதி, முத்தியால்பேட்டை, புதுச்சேரி 3

துணை தலைவர் - வலேர் மாதன்ராஜ் 2, சங்கோதி அம்மன் கோவில் வீதி, உருளையன்பேட்டை, புதுச்சேரி

அமைப்பாளர் - **பெ.வீரன்** 31, அநேதாணியர் கோவில் தெரு, குமரகுருபள்ளம், புதுச்சேரி

துணை அமைப்பாளர்கள் - இரா.சந்தோஷ் 31, குமரன் வீதி, தத்தக்குட்டை, அரும்பார்த்தபுரம், புதுச்சேரி 605110 சே.சிவராம், எம்.இ.. 25, எப். பிளாக், ஹவுசிங் போர்டு, ஜவகர் நகர், பூமியான்பேட், புதுச்சேரி 605005 வ.வேல்முருகன் 38, மடக்கு மாரியம்மன் கோவில் தெரு, கோவிந்தசாலை, புதுச்சேரி 11 அ.ரபேல் 21, முல்லை வீதி, புது நகர், தேங்காய்த்திட்டு, புதுச்சேரி செ.பாலகுரு 87ஏ, மெயின் ரோடு, குருவிநத்தம் அஞ்சல், புதுச்சேரி - 605402 வீ.கருணாகரன் 57, 7வது குறுக்குத் தெரு, அண்ணா நகர், புதுச்சேரி - 605005 அ.பார்த்திபன் 29, புருஷோத்தமன் வீதி, சண்முகம் நகர், அரியாங்குப்பம் புதுச்சேரி - 7 ப.வெங்கடேசன் 105, சுப்புராயன் வீதி, அரியாங்குப்பம் புதுச்சேரி - 7 ரா.கோபதி 39, புதுத் காலனி, நடுத் தெரு, செல்லிப்பட்டு, புதுச்சேரி 605501

**திருநெல்வேலி மாநகரம்**

தலைவர் - இ.நாராயணன் 63, தண்டியல்சாவடி தெரு, திருநெல்வேலி டவுண்

துணை தலைவர் - எஸ்.மீரான் அப்துல் காதர் 4/139, பள்ளிவாசல் தெரு, கோட்டூர், பாளையங்கோட்டை

அமைப்பாளர் - **சித்திக்** 6, எக்கின் பிள்ளை மேலத்தெரு, மேலப்பாளையம்

துணை அமைப்பாளர்கள் - எம்.அழகு நம்பி 10சி, என்.எஸ்.கே. கலைவாணர் தெரு, உடையார்பட்டி, திருநெல்வேலி ரஹ்மான்ஷா 37ஏ/12, ஞானியார் அப்பா நகர், 6வது தெரு, மேலப்பாளையம் வெங்கடேஷ் 20, வயல் தெரு, திருநெல்வேலி டவுண் சக்திவேல் 234டி, சிவன் கோவில் கீழத்தெரு, அக்ரஹாரம், தச்சநல்லூர் வெங்கடேஷ்வரன் விஜயலெட்சுமி பவன், தனுஷ்கோடி, ஆதித்தன் நகர், பாளையங்கோட்டை

**தாம்பரம் மாநகரம்**

அமைப்பாளர் - **கி.முத்துமாறன்** 12எ, திருவள்ளுவர் தெரு, எம்.இ.எஸ்.ரோடு, மோதிலால் நகர், கி.தாம்பரம், சென்னை-600059

துணை அமைப்பாளர்கள் - எம்.கே.குணசேகரராஜா 7 வ.உ.சி. தெரு, கஸ்தூரிபாய் நகர், மே.தாம்பரம், சென்னை - 600045 இ.வி.சுரேஷ் 33, 3வது பிரதான சாலை, ராமகிருஷ்ணாபுரம் பிரதான சாலை, சென்னை - 600059 கோ.விஜய் கணேஷ் 65 பேட்டை தெரு, அனகாபுத்தூர், சென்னை-600070 ம.வாசு 6 நம்மாழ்வார் தெரு, பழைய பல்லாவரம், சென்னை 600117 எஸ்.பிரபாகரன் 10 வடக்கு மாடவீதி, மாடம்பாக்கம், சென்னை-600126

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.

**மாஸ்டர் பெ. சேகர்,**
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், பெருங்குடி அரசு உயர்நிலைப்பள்ளியில், "கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம் மருத்துவ முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### திருப்பூர் மாவட்டம் - காங்கேயத்தில் மா மற்றும் மரவள்ளி பயிர்கள்

# சாகுபடியில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்த கருத்தரங்கம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், செப். 4 -

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் நகராட்சி கே.வி.எ.திருமண மண்டபத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் சார்பில் மா மற்றும் மரவள்ளி பயிர்கள் சாகுபடியில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்கினை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி கே.வி.எ.திருமண மண்டபத்தில் 31.08.2023 வியாழக் கிழமை அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன் தலைமையில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக் கலைத் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு ரூ.5,17,130/ மதிப்பீட்டில் வேளாண் இடுபொருட்கள் மற்றும் வேளாண் உபகரணங்களை வழங்கி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் சார்பில் மா மற்றும் மரவள்ளி பயிர்கள் சாகுபடியில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்கினை துவக்கி வைத்தார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : முதலமைச்சர் அவர்கள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் சார்பில் மா மற்றும் மரவள்ளி பயிர்கள் சாகுபடியில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்கு இன்றைய தினம் துவக்கி வைக்கப் பட்டுள்ளது. குறிப்பாக மா மற்றும் மரவள்ளி பயிர்கள் சாகுபடி குறித்தும், தென்னை சாகுபடி குறித்தும் அதில் ஏற்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்தும் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்த விவசாய கருத்தரங்கை ஒரு விவசாயியாக துவக்கி வைப்பதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு பல்வேறு இயற்கை சூழ்நிலை காரணமாக நோய் தாக்கம் பயிர்களுக்கு ஏற்பட்டு நாம் செலுத்துகிற உழைப்புக்கான பலனை பெற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. எனவே பயிர்களுக்கு பல்வேறு நோய்கள் தாக்குகிற நேரத்தில் சம்பந்தப்பட்ட வேளாண்மைத்துறை அலுவலகங்கள் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களையெல்லாம் சந்தித்து அது குறித்து விளக்கம் கேட்டு விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும். பயிர்களை பாதுகாத்தால் தான் உணவு உற்பத்தியை பெருக்க முடியும். தென்னை பயிர்கள் அதிகம் இருக்கக்கூடிய பகுதிக்கே சென்று என்னென்ன நோய்க்கு என்னென்ன மாதிரியான மருந்தை பயன்படுத்தி நோயிலிருந்து காப்பாற்றக் கூடிய நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்தும், ஒளிநாடாவாக பதிவு செய்து பொது மக்களுக்கு விளக்குகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. நம்முடைய விளைச்சலை அதிகப்படுத்தி உழைப்புக்கான ஊதியம் பெறுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளவும், மக்களுக்கான உணவு உற்பத்தி செய்திட முடியும் என்கின்ற நம்பிக்கையின் தான் இந்த மாவட்ட அளவிலான கருத்தரங்கு நிகழ்ச்சி வேளாண்மைத்துறை சார்பில் நடத்தப்படுகின்றது.

மேலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமாக இந்த கருத்தரங்கம் நடைபெற வேண்டும். இன்னும் சில பயிர்கள் குறித்து இணைத்து விவசாயிகளுக்கு தகவல்களை தெரிவித்து அதில் விவசாயிகள் நேரடியாக கலந்து கொண்டு சந்தேகங்களை கேட்டு அறியக்கூடிய வகையிலே நடைபெற வேண்டும். காலம் மாற மாற விவசாயமும் வளர்ந்து கொண்டே வருகிறது. ஏற்றம் இறைத்தல் கமலை ஏற்றம்" என்றிருந்த நம் விவசாயிகள் கிணறு அல்லது ஆழதுளைக் கிணறுக்கு இப்போது மாறிவிட்டார்கள். கிணறுகளில் இருந்து நீர் இறைக்க நிச்சயம் மின்சாரம் வேண்டும். இதற்காக தமிழ்நாடு அரசு இலவச மின்சாரத்தை வழங்கி வருகிறது. "எல்லோருக்கும் எல்லாம்" என்ற நம் முதல்வரின் வைர வரிகளுக்கு ஏற்ப 1.50 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.333 கோடி மானியம் 234 தொகுதி வண்ணம் இலவச மின்சார விவசாய பெருமக்களும் பயனடையும் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

1999 ஆம் ஆண்டு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்கள் "உழவர் சந்தை திட்டத்தை" அறிவித்தார். விவசாயிகள் தாங்கள் விளைநிலங்களில் விளைவிக்கும் காய்கறிகள் பழங்கள் தேங்காய் உள்ளிட்ட வேளாண் விளைபொருள்களை இடைத்தரகர்கள் வியாபாரிகள் குறுக்கீடு ஏதும் இல்லாமல் நேரடியாக விற்பனை செய்ய முடியும். கிராம அளவில் ஒட்டுமொத்த வளர்ச்சியை எட்டும் நோக்கில் " கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம்" அறிமுகப்படுத்தப் பட்டது. கிராம ஊராச்சிகளிலும் உள்ள தரிசு நிலங்களைக் கண்டறிந்து பாசன நீர் ஆதாரங்களை உருவாக்கி சாகுபடிக்கு கொண்டு வருவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் நமது காங்கயம் வட்டாரத்தில் "பொத்தியபாளையம் தரிசு நிலத் தொகுப்பு" உருவாக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத்துறையில் விவசாயிகளுக்கான தனியாக நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு விவசாயிகளுக்காக கட்டணம் இல்லாத மின்சாரம், விவசாயி கடன் தள்ளுபடி போன்றவற்றை செய்து விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகிறார்கள். அதே போல, தோட்டக்கலைத்துறையின் சார்பில் பல்வேறு ஆலோசனை வழங்கப்பட்டு விவசாயத்தை மேம்படுத்த மக்களுக்கான வாழ்வாதாரத்தை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி விவசாயம் செய்வதன் மூலம் அதிக இலாபம் ஈட்டமுடியும். எனவே, இதுபோன்று நடத்தப்படும் கருத்தரங்கில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆலோசனைகளை பெற்று வேளாண் உற்பத்தியை பெருக்கி கொள்ள இந்த கருத்தரங்கு வாயிலாக கேட்டுக் கொள்கிறேன் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பேராசிரியர்கள் முனைவர்.சண்முகசுந்தரம், முனைவர்.ராஜமாணிக்கம், துணை இயக்குநர் (தோட்டக்கலைத் துறை) (பொ) எஸ்.மணிமேகலை, துணை இயக்குநர் (வேளாண்மை) சுருளியப்பன், கோயம்புத்தூர், பொங்கலூர் வேளாண்மை அறிவியல் நிலைய இணை பேராசிரியர் முனைவர். பி.கலையரசன், உதவிப் பேராசிரியர் முனைவர் ஜெ.திலகம், காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், ஒன்றியக்குழு பெருந்தலைவர் மகேஷ்குமார், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கே.எஸ்.சதீஸ்குமார் உள்பட மாவட்ட, நகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சீர்காழியில் விஷ வண்டுகள் தாக்கி

# உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 4 -

மயிலாடுதுறை மாவட்டத்தில் விஷ வண்டுகள் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், 80 ராதா நல்லூர் கிராமம், அய்யனார் கோவில் தெருவைச் சேர்ந்த திரு. வீரமணி த/பெ. செண்டாய் என்பவர் கடந்த 31.08.2023 அன்று திருக்கடையூர் கிராமத்தில் மாங்காய் பறிக்கும் வேலை செய்து கொண்டிருக்கும் போது கதண்டு என்கிற விஷ வண்டுகள் தாக்கி காயமடைந்து திருக்கடையூர் ஆரம்ப சுகாதார நிலை யத்தில் முதலுதவி செய்யப்பட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் நேற்று (292023) காலை உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

உயிரிழந்த திரு.வீரமணி அவர்களின் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட உத்திரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.




நீட் தேர்வு திணிப்பால் படுகொலை செய்யப்பட்ட அனிதாவின் நினைவு நாளையொட்டி நீட் எதிர்ப்பு போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு தருமபுரி அண்ணா சிலை முன்பு தருமபுரி கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன் ஏற்பாட்டில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தடங்கம்.பெ.சுப்ரமணி தலைமையில் நடைபெற்றது உடன் மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் கௌதம், அன்பரசன் , வேடியப்பன், திராவிடர் கழகம் ஊமை.ஜெயராமன்,மற்றும் மாநில, மாவட்ட, நகர கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# ஒரே நாடு ஒரே தேர்தல்: இந்துராஷ்டிர செயல் திட்டம்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, செப். 4 -

2014 இல் நரேந்திர மோடி தலைமையில் பாரதிய ஜனதா கட்சி அரசு பொறுப் பேற்றதிலிருந்து ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே கல்வி முறை, ஒரே வரி, ஒரே குடும்ப அட்டை என்று எல்லாவற்றையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து டெல்லியில் அதிகாரங்களை குவித்து வைத்துக் கொண்டு எதேச்சதிகார ஆட்சி நடத்துகிறது.

இதன் உச்சகட்டமாக ஒரே நாடு; ஒரே தேர்தல் என்று நீண்ட காலமாக பா.ஜ.க. கூறிவரும் திட்டத்தைச் செயல்படுத்த மோடி அரசு தீவிரமாக முனைந்திருக்கிறது. இந்திய குடியரசின் முன்னாள் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரே நாடு; ஒரே தேர்தல் குறித்து ஆய்வு செய்திட ஒன்றிய பா.ஜ.க. அரசு குழுவை அறிவித்திருக்கிறது.

குடியரசு தலைவர் பதவியில் இருந்தவரை மரபுகளை மீறி இத்தகைய குழுவுக்கு தலைவராக நியமித்த மோடி அரசின் செயல் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல; கண்டனத்துக்குரியது.

மோடி தலைமையில் ஆட்சியில் அமர்ந்திருக்கும் பாசிச ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க. தனது இந்துராஷ்டிர இலக்கை அடைவதற்காக பல்வேறு சட்டரீதியான ஆயத்தப் பணிகளை, பரிசோதனைகளை செய்துவருகிறது.

குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்புரிமைச் சட்ட நீக்கம், பசுவதைத் தடுப்புச் சட்டம், லவ் ஜிகாத் தடுப்புச் சட்டம், மதமாற்றத் தடைச்சட்டம், புதிய கல்வி(காவி)க் கொள்கை, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (உஃபா), என்.ஐ.ஏ. சொத்துசேதத் தடுப்புச் சட்டம், ஆதாரை வாக்காளர் அட்டையுடன் இணைப்பது என பல்வேறு சட்டங்களை இதற்கான சான்றாகச் சுட்டிக்காட்டலாம். அதன் வரிசையில் தற்போது, 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' சட்டத்தையும் நடைமுறைக்கு கொண்டுவர இருக்கிறது. 2014இல் இருந்தே பா.ஜ.க. தனது தேர்தல் அறிக்கையில், 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' என்ற திட்டத்தை முன்வைத்து வருகிறது. இதை நடைமுறைப்பபடுத்துவதற்கான திட்டங் களை 2017 ஆம் ஆண்டு நிதி ஆயோக் வகுத்துக் கொடுத்தது.



2018ஆம் ஆண்டு சட்ட ஆணையம் இந்த 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' திட்டத்திற்காக அரசியலமைப்பு சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது.

இந்நிலையில், கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் தேதியன்று, இந்திய தலைமை தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா "ஒரே நாடு; ஒரே தேர்தல் என்பது நல்ல பரிந்துரை. ஆனால் இதற்கு அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வர வேண்டும். அனைத்து தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவதற்கு தேர்தல் ஆணையம் தயாராக உள்ளது" எனக் கூறி, பா.ஜ.க செயல் திட்டத்திற்கு ஒத்துழைக்கத் தயார் என்று பச்சைக் கொடி காட்டினார்.

தலைமை தேர்தல் ஆணையாளர் கூறியவாறு அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை செயல்படுத்த தொடக்கமாக, செப்டம்பர் 18 ஆம் தேதி முதல் செப்டம்பர் 28 ஆம் தேதி வரை நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் நடைபெற வுள்ளது.

இந்தச் சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' சட்ட முன்வரைவு தாக்கல் செய்யப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

மக்களாட்சி கோட்பாடுகளின் ஆணிவேர்களை அறுத்து எரிந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்து, சர்வாதிகார இந்துராஷ்டிரத்தைக் கட்டமைக்கத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வின் திட்டத்தை ஜனநாயக முற்போக்கு சக்திகள் கரம் கோர்த்து முறியடிக்க வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.




ஆலந்தூர் பல்லாவரம் தாம்பரம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்ட 60E குன்றத்தூர் பிராட்வே, 52G கவுல்பஜார் கோயம்பேடு மற்றும் சிற்றுந்து பேருந்துகள் S80 அனகாபுத்தூர் தென்றல் நகர் தாம்பரம் மெப்ஸ், S166 போரூர் மணிமேடு ஆகிய வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு பல்லாவரம் பேருந்து நிலையத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தனர். அருகில் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, மேயர் வசந்தகுமாரி, மண்டல குழுத்தலைவர்கள் வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை மற்றும் த.ஜெயக்குமார், டி.பாபு, ஏ.வந்தேமாதரம் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஒன்றியத்தில் தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான ஒருங்கிணைந்த சிறப்பு மருத்துவ முகாமில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தொடங்கி வைத்து, ரூ.6.24 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் மற்றும் உள்ளாட்சி நிர்வாகிகள், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள்!

# மாற்றுத்திறனாளிகள் எங்களுக்கு முன்மாதிரிகள்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு

சென்னை, செப்.4-

‘கடின உழைப்புக்கு மாற்றுத்திறனாளிகள்தான் எங்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறார்கள்’ என்று விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கும் உயரிய ஊக்கத் தொகை வழங்க தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கும் விழா பல்வேறு மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுச் சங்கங்கள் சார்பில் நேற்று நடைபெற்றது. சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நடந்த இந்த விழாவில் பங்கேற்ற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: நான் அமைச்சராக பொறுப்பேற்று 9 மாதங்கள் ஆகின்றன.

இதுவரை மாநில, தேசிய, சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நிறைய நடத்திவிட்டோம். ஆனால், இதுவரை யாரும் பாராட்டியதில்லை. நீங்கள்தான் முதல்முறையாக பாராட்டு விழா எடுத்துள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் நன்றி.

இந்த அரசாணை சாதாரணமானதல்ல. மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளின் வாழ்க்கையை மாற்றக் கூடியது. தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்றால் ரூ.5 லட்சம், வெள்ளி வென்றால் ரூ.3 லட்சம்,



வெண்கலம் வென்றால் ரூ.2 லட்சம் வழங்கப்படும். இளையோர் பிரிவுகளில் தங்கம் வென்றால் ரூ.3 லட்சம், வெள்ளி வென்றால் ரூ.2 லட்சம், வெண்கலம் வென்றால் ரூ.1.5 லட்சம் அளிக்கப்படும்.

இந்த அரசாணை மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு வாழ்க்கையில் முக்கிய மைல் கல். அதுவும் மாற்றுத்திறனாளிகளுக்கான மேம்பாட்டுக்காக பாடுபட்ட, மாற்றுத்திறனாளிகள் என்று பெயர் சூட்டிய கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடும் காலத்தில் அமலுக்கு வந்திருப்பது இன்னும் சிறப்பு. இன்றைய முதல்வரும் மாற்றுத்திறனாளிகள் நலனில் அக்கறை கொண்டவர். அவர்களின் கோரிக்கைகளுக்கு உடனடியாக செவி சாய்க்கும் முதல்வர் நமக்கு கிடைத்துள்ளார். அதுமட்டுமல்ல அவர்களின் விருப்பங்களையும் நிறைவேற்றும் திராவிட மாடல் அரசுதான் இது. மாற்றுத்திறனாளி பாப்பாத்தி வேலை கேட்டு தந்த மனுவின் அடிப்படையில் அவருக்கு ஒப்பந்தப் பணி அளிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பாரா போட்டிகளில் சாதித்த பாலசுப்ரமணியன், மனோஜ், கணேசன், வெண்ணிலா, இன்பத்தமிழ் ஆகியோருக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. அப்போது அவர்கள் பதக்கங்களுடன் மீண்டும் உங்களை சந்திப்போம் என்று சொன்னார்கள். அதேபோல் சாதித்து காட்டினார்கள். அதுபோல் நீங்களும் சாதிக்க வேண்டும். 6 பாரா ஸ்போர்ட்ஸ் அகடமி தமிழகத்தில் அமைக்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதில் முதல் அகடமி சென்னைநேரு விளையாட்டு அரங்க வளாகத்தில் விரைவில் தொடங்கப்படும். சாதாரண நிலையில் இருக்கும் விளையாட்டு வீரர்களே கடுமையாக பயிற்சி செய்ய வேண்டி உள்ள நிலையில், மாற்றுத்திறனாளிகள் பயிற்சி பெறுவது என்பது சாதாரணமானதல்ல.

கடின உழைப்புக்கு நீங்கள்தான் எங்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறீர்கள். இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

நிகழ்ச்சியில் தமிழ் நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ் நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலை. துணை வேந்தர் எம்.சுந்தர், தமிழ் நாடு பாராலிம்பிக்ஸ் விளையாட்டு சங்க நிர்வாகிகள் நாகராஜ், கிருபாகரராஜா, விஜயசாரதி, பாராலிம்பிக் வீரர்கள் தங்கவேலு மாரியப்பன், ரஞ்சித்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

### நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர்

# டி.ஆர்.பாலு கோரிக்கையை ஏற்று மருத்துவ நிதி உதவி!

### பிரதமர் அலுவலகம் கடிதம்!

புதுடெல்லி, செப். 4 -

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, சென்னை அயப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த திருமதி பார்வதி, சென்னை படப்பையைச் சேர்ந்த நடராஜன் மற்றும் சென்னை நாவலூரைச் சேர்ந்த பால்ராஜ் ஆகிய மூவரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவிடுமாறு முறையே 7.7.2023, 10.7.2023 மற்றும் 16.7.2023 ஆகிய தேதிகளில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குத் தனித் தனியே கடிதங்கள் எழுதியிருந்தார்.

டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், திருமதி பார்வதி அவர்களின் புற்றுநோய் சிகிச்சைக்காக ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரமும் (ரூ.2,50,000/), நடராசன் அவர்களின் சிகிச்சைக்காக ரூபாய் மூன்று லட்சமும் (ரூ.3,00,000/) மற்றும் பால்ராஜ் அவர்களின் சிகிச்சைக்காக ரூபாய் ஒரு லட்சமும் (ரூ.1,00,000/) பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம், டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களுக்கு, 18.7.2023 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரம் வருமாறு:

பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, திருமதிபார்வதி, நடராஜன் மற்றும் பால்ராஜ் ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக வழங்கப்படும் மொத்த உதவித் தொகையான 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயானது, பயனாளர்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனைகளான சென்னையில் உள்ள அடையாறு புற்றுநோய் மையம் மற்றும் போரூர் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் என்றும், சிகிச்சை நிறைவு பெற்றவுடன், உரிய ஆவணங்களின் நகலை பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலை! ஆட்சியர் ச.உமா தலைமை!

# மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு மருத்துவ முகாம்!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ரூ.6.24 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

நாமக்கல், செப். 4 -

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், தங்கசாலை தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான ஒருங்கிணைந்த சிறப்பு மருத்துவ முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார்.

ஒருங்கிணைந்த சிறப்பு மருத்துவ முகாமினை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தொடங்கி வைத்து, மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனைகள் வழங்கப்படுவதை பார்வையிட்டார்.

இம்முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 7 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரம், 7 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை, தமிழ்நாடு ஊரக வாழ்வதாரம் சார்பில் நிதியுதவி, விசைத்தறி அமைக்க நிதிஉதவி, ஆடு வளர்ப்பு, வருவாய் துறையின் சார்பில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, கூட்டுறவுத்துறையின் சார்பில் கடனுதவி, ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்ட அடையாள அட்டை என மொத்தம் 47 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.6.24 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பேசும் போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாகவும், மாற்றுத்திறனாளிகளின் திறன்களை அங்கீகாரித்து மாற்றுத்திறனாளிகள் என்ற வார்த்தையினை உருவாக்கினார்கள். மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக தனியே ஒரு துறையை ஏற்படுத்தி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி அவர்களின் உரிமையை பாதுகாத்து, மாற்றுத்திறனாளிகள் நல வாரியம், மாத உதவித் தொகை, பராமரிப்புத் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மேற்படிப்பு பயில உதவித் தொகை, இலவச பேருந்து பயணம், மாற்றுத்திறனாளிகளுக்கு பேருந்தில் தனியாக இருக்கை இது போன்று எண்ணற்ற திட்டங்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையினை தனது கட்டுப்பாட்டிலேயே வைத்து அவர்களின் நலன் காக்க பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர்களுக்கு இலவசமாக இலவச பேருந்து பயண சலுகை, திருக்கோயில்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசமாக திருமணம் உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தியவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாடு மாநிலம் தேர்வு செய்யப்பட்டு குடியரசு தலைவர் அவர்களால் விருது வழங்கப்பட்டுள்ளது. மேலும், சிறந்த மாவட்டமாக சேலம் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டும் விருது வழங்கப்பட்டுள்ளது. இம்முகாமை மாற்றுத்திறனாளிகள் இதனை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டுமென அமைச்சர் மா.மதிவேந்தன் என கேட்டுக் கொண்டார்.

முன்னதாக, நாமக்கல் தெற்கு அரசு மேல்நிலைப் பள்ளியில், பட்டுவளர்ச்சித் துறை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மல்பெரி மரக்கன்றுகளை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராம லிங்கம் ஆகியோர் நட்டு வைத்தனர். மேலும், மோகனூர் வட்டம், காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் தங்கபாண்டியன் மகன் மற்றும் மகள் ஆகியோர் தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளதையடுத்து, அவர்களுக்கான ரூ.38,000/ மதிப்பில் ஐ.சி.யு. காட் எனப்படும் கட்டில்களை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் நாமக்கல் நகர் மன்ற தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, ஒன்றிய செயலாளர்கள் ஆர்.எம்.துரைசாமி, மோகனூர் பெ.நவலடி, பேரூராட்சி தலைவர்கள் வனிதா மோகன் (மோகனூர்), ஆர்.எஸ்.எஸ். ராஜேஸ் (வெண்ணந்தூர்) மற்றும் உள்ளாட்சி நிர்வாகிகள், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

# 33 திராவிட மாடல் அரசு





# பாடநூல்களுக்கு அப்பால்...

பலருக்கும் புத்தகம் என்றால், அது பாடப் புத்தகம்தான். பாடப் புத்தகங்கள் ஒருவரை கல்வியில் தேர்ச்சி பெற வைக்கும். ஆனால், பாடப் புத்தகங்களைத் தாண்டியும் ஒருவர் மேற்கொள்ளும் வாசிப்புதான் அவருக்கு உண்மையான அறிவை வழங்கி, வாழ்க்கையில் தேர்ச்சி பெற வைக்கும்.

தமிழ்நாட்டில், பாடப் புத்தகங்களைப் பதிப்பிப்பதற்காகவே 1970-ஆம் ஆண்டு மார்ச் 4-ஆம் தேதி தொடங்கப்பட்டது, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம். பின்னர் 1993-இல் ‘தமிழ்நாடு பாடநூல் கழகம்’ என்றும், 2013-இல் ‘தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்’ என்றும் பெயர் மாற்றத்துக்கு உள்ளானது.

பெயர் மாற்றத்துக்கு உள்ளானதைத் தவிர, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அந்தக் கழகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நடைபெற வில்லை. இந்நிலையில், 2021-இல் மே மாதம் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான **‘திராவிட மாடல் அரசு’** பொறுப்பேற்ற பிறகு, வியக்கத்தக்க மாற்றங்களும், விடியலுக்கான புதிய முன்னெடுப்புகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆம்... இதுவரை பாடநூல்களை மட்டுமே பதிப்பித்து வந்த பாடநூல் கழகம், இப்போது பாடநூல்களுக்கு அப்பாலும் நிறைய புத்தகங்களை அச்சிட்டு வருகிறது. கல்விப் பணிகளுடன் இப்போது இலக்கியப் பணிகளையும் அது மேற்கொண்டு வருகிறது.

## திசைதோறும் திராவிடம்

தமிழ்நாடு பாடநூல் கழகம் மேற்கொண்டு வரும் முக்கியமான வெளியீட்டுத் திட்டங்களில் முதன்மையானது **‘திசைதோறும் திராவிடம்’** திட்டம். 2021- ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது கல்வித்துறையால் முன்மொழியப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் தமிழர் பெருமையைப் பேசும் இலக்கியங்கள், சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகள் ஆகியவற்றை மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, தொ.பரமசிவனின் **‘அறியப்படாத தமிழகம்’**, சிலப்பதிகாரம் ஆகியவை ஆங்கிலத்திலும், திருக்குறளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய உரை தெலுங்கிலும், பூமணியின் **‘வெக்கை’** மலையாளத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.



மேலும், வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், இந்த ஆண்டு **பழ.அதியமான் எழுதிய ‘வைக்கம் போராட்டம்’** எனும் ஆய்வு நூல், மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சராலும், கேரள முதலமைச்சராலும் வெளியிடப்பட்டது.

## முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்!

‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்’ என்ற மகாகவி பாரதியாரின் கனவை நனவாக்கும் விதமாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, 1970-களில் அறிவியல், மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகள் சார்ந்த சுமார் 875 நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் திட்டத்தை மீட்டெடுக்கும் வகையில், கடந்த ஆண்டு 45 துறைசார் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன.

இந்த ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற சென்னை சர்வதேசப் புத்தகத் திருவிழாவில், தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 5 மருத்துவ நூல்களை முதலமைச்சர் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, மேலும் 13 மருத்துவ நூல்கள் உட்பட சுமார் 80-க்கும் மேலான நூல்கள் இந்த ஆண்டு மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

## 21 மொழிகளில் பெரியார்

இந்தியாவுக்காக தெற்கிலிருந்து நாம் பேச வேண்டிய நேரம் இது. அதற்கு முன்னோட்டமாக இந்திய மொழிகள் மட்டுமல்லாது, உலக மொழிகளும் என 21 மொழிகளில் தந்தை பெரியாரின் எழுத்துகள், பேச்சுகள், சிந்தனைகள் ஆகியவை மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

மேலும், அறிஞர் பெரியசாமி தூரன் தலைமையில் 1960-களில் தயாரிக்கப்பட்ட ‘கலைக்களஞ்சியம்’ ஆவணப் பதிப்பாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோல அவர் குழு தயாரித்த **‘குழந்தைகள் கலைக்களஞ்சியம்’** நூலும் ஆவணப் பதிப்பாகத் தயாராகி வருகிறது. அதை முதலமைச்சர் விரைவில் வெளியிட உள்ளார்.

## இளந்தளிர் இலக்கியத் திட்டம்

புத்தகங்கள் என்றால், பாடப் புத்தகங்கள்தான் என்று பலரும் நினைப்பது போல, பாடம் அல்லாத பிற நூல்கள் என்று சொன்னால், அவற்றைப் பெரியவர்களுக்கான விஷயங்களாகவே பார்க்கும் போக்கு பலரிடையே உள்ளது. அதற்கு மத்தியில், குறிப்பிடத்தகுந்த அளவுக்குத் தமிழில் சிறார் இலக்கியங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

தமிழ்நாடு பாடநூல் கழகம் இதிலும் தனி முத்திரை பதித்து வருகிறது. **‘இளந்தளிர் இலக்கியத் திட்டம்’** என்ற முன்னெடுப்பின் கீழ் குழந்தைகளை சமூகத்தில் நல்ல குடிமக்களாக்கும் பொருட்டுக் கதை வடிவில் நிறைய நூல்கள் கொண்டு வரப் பட்டுள்ளன. குழந்தைகளை மூன்று பருவத்தினராக வகைப்படுத்தி, அவர்களின் வயதுக்கு ஏற்றபடியான நூல்களை, பாடநூல் கழகம் வெளியிட்டுள்ளது. உதாரணத்துக்கு, **‘குட் டச், பேட் டச்’** என்பதை விளக்கும் **‘என்னைத் தொடாதே’**, மாற்றுத்திற னாளிகள், இட ஒதுக்கீடு போன்ற சமூக நீதியைக் கற்றுத் தரும் நூல்கள் ஆகியவை குழந்தைகள், ஆசிரியர்கள் ஆகியோரிடையே மட்டுமல்லாது பெற்றோர்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

## சிறப்பு வெளியீடுகள்

புத்தகங்கள் மட்டுமல்லாது வ.உ.சி.யின் 150-வது பிறந்த ஆண்டைச் சிறப்பிக்கும் வகையிலான இதழ், திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் பற்றிய வெளியீடுகள், ‘பொருநை’, ‘கீழடி’ அகழாய்வுகளின் அறிக்கைகள் போன்ற நிறைய சிறப்பு வெளியீடுகளையும் அவ்வப்போது பாடநூல் கழகம் வெளியிட்டு வருகிறது.

எல்லாவற்றுக்கும் மகுடம் சூட்டியதுபோல 2023 ஜனவரியில் முதலாவது ‘சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா’வை பொதுநூலகத் துறையோடு இணைந்து பாடநூல் கழகம் நடத்தியது. அதில் 30 நாடுகளிலிருந்து எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் கலந்துகொண்டனர். 350-க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- தமிழ்ப் புனைவு, அபுனைவு இலக்கியப் படைப்புகள் சுமார் 50-க்கும் மேலானவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- இலக்கிய மொழிபெயர்ப்புப் படைப்புகளை, பெங்குயின், ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டி பிரஸ், ஹார்ப்பர் காலின்ஸ் உள்ளிட்ட ஆங்கிலப் பதிப் பகங்களுடன் இணைந்து பாடநூல் கழகம் வெளி யிடுகிறது.
- மருத்துவ மொழிபெயர்ப்பு நூல்களை, அறிவியல் புத்தகங்களைப் பதிப்பிப்பதற்குப் பெயர் பெற்ற சர்வதேசப் பதிப்பகமான ’எல்ஸிவ்யர்’ மூலம் கொண்டு வருகின்றது பாடநூல் கழகம்.
- நாட்டுடைமையாக்கப்பட்ட எழுத்தாளர்களின் நூல்கள், நூற்றாண்டு காணும் எழுத்தாளர்களின் நூல்கள் ஆகியவற்றையும் பாடநூல் கழகம் பதிப்பிக்கிறது.

அந்தப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை ஏற்பாடு செய்யும் முன்பு கடந்த ஆண்டு அக்டோபரில் தமிழ்நாடு அரசு அதிகாரிகள் சிலர், ஜெர்மனி ஃப்ராங்க்ஃபர்ட்டில் நடைபெற்ற **‘உலகப் புத்தகத் திருவிழா’**வுக்குச் சென்று, இங்கும் அதுபோன்ற திருவிழாவை நடத்துவதற்கான அனுபவங்களைப் பெற்று வந்தார்கள். அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு அக்டோபரில் ஃப்ராங்க்ஃபர்ட்டில் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் சார்பாக, தமிழ்நாடு பாடநூல் கழகம் தனது வெளியீடுகளைக் காட்சிப்படுத்த இருக்கிறது.

அறிவை வளர்ப்பது மட்டுமல்ல... மனதைப் பண்படுத்துவதும்தான் சிறந்த மனிதர்களை உருவாக்கும். அதைத்தான் ‘திராவிட மாடல் அரசு’ பாடநூல் கழகம் வழியாகச் செய்துவருகிறது..!

**...சாதனை தொடரும்**

## முதல்வர் கவனம் பெற்ற ஓவியம்!



காலை உணவுத் திட்டம் பல வகைகளிலும், பல திசைகளிலும் பாராட்டுகளைப் பெற்று வருகிறது. அதன் பயனாளிகளான பள்ளிப் பிள்ளைகள் மனதிலும் மிகப்பெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளது.

கற்றலில் மட்டுமல்ல, அவர்கள் ஆற்றலிலும் பாய்ச்சலை நிகழ்த்தி வருகிறது. அதை ஓவியமாக வரைந்துள்ளனர் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர்கள், காலை உணவுத் திட்டத்தினை முதல்வர் தொடங்கி வைத்த காட்சிகளைக் கரும்பலகையில் ஓவியமாக வரைந்துள்ளனர். அந்தப் படத்தினை முதல்வர் பார்வைக்கும் கொண்டு செல்ல வேண்டும் என விரும்பியுள்ளனர். அதேபோலவே அந்தப் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பரவி, நமது முதல்வர் கவனத்துக்கும் வந்து பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார். காலை உணவுத் திட்டம் மிகப் பெரிய மாற்றங்களை நிகழ்த்தி வருவதை ஓர் ஓவியத்தின் பயணம் சொல்லிவிட்டது.

## :ப்ளாஷ்பேக்





தமிழருவி

### பணிக்குப் பாராட்டு!

1996-ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்துக்கு, திருச்சிக்கு வந்த தளபதி அவர்கள் திருச்சி, சங்கம் ஹோட்டலில் தங்கி இருந்தார். அப்போது, அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் கழகத்துக்கு ஆற்றும் பணியினைப் பாராட்டும் வகையில், அய்யா ஆதிமூலம், அண்ணன் அன்பில் பொய்யாமொழி, தி.ப.மாயவன், திருச்சி சிவா ஆகியோர் என்னை தளபதியாரிடம் அறிமுகப் படுத்தி வைத்தனர். அவர் கழகத்துக்காக மேலும் பணியாற்ற வேண்டும் என்று என்னைப் பாராட்டினார். 72 வயது ஆகியும் என் இல்லத்தில் இந்தப் புகைப்படத்தைப் பார்க்கின்ற போதெல்லாம் உற்சாகமாக 27 வயது இளைஞர் போல் கழகப் பணியாற்றிட உந்துதல் தருகிறது.

**-சி.தமிழருவி,**
**ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர், அந்தநல்லூர் ஒன்றியம், திருச்சி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண் டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தூக்குமேடை நாடகம்

**1952-ஆம் ஆண்டு, தஞ்சை மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ கழகத்தின் சார்பில் நிதி திரட்டப்பட்டது. அந்தப் பணிக்குப் பொறுப்பேற்றவர் கலைஞர். அந்த முயற்சிக்காக கலைஞர் எழுதிய ‘தூக்குமேடை’ நாடகம் பல இடங்களில் நடத்தப்பட்டு நிதி திரட்டப்பட்டது. சங்கரன் கோயிலில் நாடகத்துக்கு ஏற்பாடு செய்தவர், வசூலான பணத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். சென்னை திரும்ப பணமில்லாமல் நின்ற கலைஞர், சிவாஜிகணேசன், சி.வி.எம்.அண்ணாமலை உள்ளிட்ட குழுவுக்கு, தூத்துக்குடியில் கே.வி.கே.சாமி உள்ளிட்ட தோழர்கள் உதவினர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 230




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131